**உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்**
**அவர்களின் நடவடிக்கைகள்,**
**முன்னிலை : திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,**

**ந.க.எண். 120/2018/காஉதிகு** **நாள். 19.03.2018.**

**பொருள்:** அனுமதியற்ற மனைப்பிரிவு - வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் - காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - கோனேரிகுப்பம் ஊராட்சி – கோனேரிகுப்பம் கிராமம் - சர்வே எண்.211/2 & 212/1-ல் பரப்பு 3.22 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ4(3) துறை, நாள்.04.05.2017.
2. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ4(3) துறை, நாள்.13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13193/17/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.17, 07.11.17.
4. மனுதாரர் திரு.சம்பத் மற்றும் மூவர் ஆகியோரின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.31.01.2018.
5. Online Application Registration No.DTCP/L/0046319/2017 dt:22.01.2018.

********

**உத்தரவு:-**

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், கோனேரிகுப்பம் ஊராட்சி, கோனேரிகுப்பம் கிராமம், சர்வே எண்.211/2 & 212/1-ல் பரப்பு 3.22 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In principle approval) வழங்கப்படுகிறது.

மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./காஉதிகு/எண்.61(R)/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2..

Pawlcnzed

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | - | 3.22 ஏக்கர் அல்லது 140263.2 சதுர அடி |
| மொத்த மனைகள் | - | 71 |
| விற்பனை செய்த மனைப்பரப்பு | - | 1500.00 சதுர அடி |
| விற்பனை செய்யப்படாத மனைப்பரப்பு | - | 106642.00 சதுர அடி |
| OSR பரப்பளவு | - | 10695.00 சதுர அடி - 10.02% |

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்</u>

1. பரிசீலனை கட்டணம் online மூலம் மனை ஒன்றுக்கு ரூபாய் 500 வீதம் 35 மனைகளுக்கு பெறப்பட்டுள்ளது. இதர 36 மனைக்கு ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் Member Secretary, Kancheepuram Local Planning Authority என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand Draft) பெறப்படவேண்டும்.
2. வரன்முறைப்படுத்தல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

**<u>Head of Department Code 26-02</u>**
0212, Urban Development - 60- Other Urban
Development Schemes 800- Other Receipts.
AT Receipts under Regularisation
Charges of Unapproved Layouts and Plots - DTCP
(DPC:0217-60-800-AT-0007)

3. வளர்ச்சி கட்டணம் ஒவ்வொரு மனை பரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
5. மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் OSR இடம் உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலும் கணக்கு தலைப்பினில் செலுத்தப்பட்ட விபரங்கள் உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதை இவ்வலுவலகத்திற்கு விபரம் உடன் அனுப்பிட தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்கள் செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அபிவிருத்தி செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனைப்பிரிவுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ)
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
காஞ்சிபுரம்.

19/3/2018

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் 2 நகல்கள்.

**பெறுநர்**
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கோனேரிகுப்பம் ஊராட்சி,
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம்.

**நகல்**

1. திரு.M.சம்பத் மற்றும் மூவர்,
   32, பஞ்சுபேட்டை சின்ன தெரு,
   காஞ்சிபுரம்.

2. நகர் ஊரமைப்பு ஆணையர், 807, அண்ணாசாலை,
   சென்னை (வரைபடத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது)

3. உறுப்பினர் செயலர் (பொ) (வரைபடத்துடன்)
   காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம்.

4. சார்பதிவாளர் இணை-I,
   அண்ணா குடியிருப்பு பகுதி,
   ஓரிக்கை, காஞ்சிபுரம்.
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

5. உதவி இயக்குநர், (நில அளவை)
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
   காஞ்சிபுரம்.

6. வட்டாசியர், காஞ்சிபுரம் வட்டம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

} (5, 6) சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

தனி அலுவலர் கோனேரிகுப்பம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.பா.சிவஞானசுந்தரம், பி.காம்.,

ந.க.எண்.1171/2018/ஆ3

நாள்.17.10.2018

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கோனேரிகுப்பம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.211/2 & 212/1-ல் மொத்த பரப்பு 3.22 ஏக்கர் (அ) 1,40,263 சதுர அடி இடத்தில் அமைந்துள்ள "விவேகானந்தர் நகர்" அனுமதியற்ற வீட்டு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான (In Principle approval) ம.வ./கா.உ.தி.கு.எண்.**61(R)/2018** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - "விவேகானந்தர் நகர்" மனைபிரிவில் (Lay Out) உள்ள (Un Sold Plots) விற்கப்படாத மனைகள் எண்ணிக்கை 70 (எழுபது) மனைகளுக்கு மொத்த விஸ்தீரணம் **1,06,642** சதுர அடி மட்டும் வரன்முறை செய்து (Regularisation of Unapproved Lay Out) உத்திரவிடுதல்.

பார்வை -
1. G.O.(Ms).No.78, Housing and Urban Development [UD4(3)] Department, dated.04.05.2017
2. G.O.(Ms).No.172, Housing and Urban Development [UD4(3)] Department, dated.13.10.2017
3. உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.120/2018/காஉதிகு நாள்.19.03.2018
4. கோனேரிகுப்பம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.**152** நாள்.15.10.2018
5. மனுதாரர் திரு.M.சம்பத் மற்றும் மூன்று நபர்கள், எண்.32, பஞ்சுபேட்டை சின்ன தெரு, காஞ்சிபுரம் 631 501

******

<u>உத்தரவு</u> :-

அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரிகுப்பம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.211/2 & 212/1-ல் மொத்த பரப்பு 3.22 ஏக்கர் (அ) 1,40,263 சதுர அடி இடத்தில் அமைந்துள்ள "விவேகானந்தர் நகர்" அனுமதியற்ற குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான (In Principle approval) ம.வ./கா.உ.தி.கு.எண்.**61(R)/ 2018** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து பார்வை 3-ல் காணும் உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகளின்படி ஒப்புதல் பெறப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 1-ல் காணும் அரசாணையில் "Competent Authority in Case of Village Panchayat, Block Development Officer (Village Panchayat) என அதிகாரம் அளித்துள்ளதன் அடிப்படையிலும், "விவேகானந்தர் நகர்" மனைபிரிவில் (Lay Out) உள்ள (Un Sold Plots) **விற்கப்படாத மனைகள் எண்ணிக்கை 70 (எழுபது) மனைகளுக்கு மொத்த விஸ்தீரணம் 1,06,642 சதுர அடி** மட்டும் வரன்முறை செய்து (Regularisation of Unapproved Lay Out) இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் வீட்டு மனைப்பிரிவு வரன்முறை உத்தரவும் (Regularisation Order) ரத்து செய்யப்படும்.
- மேற்கண்ட வீட்டு மனைபிரிவில் வரன்முறை படுத்தப்பட்ட உத்தரவு மனை பிரிவுக்கு மட்டுமே பொருந்தும். கட்டிட அனுமதிக்கு பொருந்தாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

தனி அலுவலர்
கோனேரிகுப்பம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.M.சம்பத்
மற்றும் மூன்று நபர்கள்,
எண்.32, பஞ்சுபேட்டை சின்ன தெரு,
காஞ்சிபுரம் 631 501

17/10/18

நகல் - உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - Joint I, சார்பதிவாளர் காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - ஊராட்சி செயலர், கோனேரிகுப்பம் ஊராட்சி